## கோமரன்கடவல பிரதேச சபை
## திருகோணமலை மாவட்டம்

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 நவம்பர் 12 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 பெப்ரவரி 11 ஆந் திகதியும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 பெப்ரவரி 23 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கோமரன்கடவல பிரதேச சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கடை வாடகை பதிவேட்டின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 63,280 தொகையான கிடைக்க வேண்டிய கடை வாடகை மீதி ரூபா 76,100 ஆக கணக்கீடு செய்யப்பட்டமையால் கடை வாடகை ரூபா 12,820 தொகை அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) புறநெகும செயற்திட்டத்தின் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு காசேட்டு மீதியான ரூபா 1,603,256 தொகை நிதிக்கூற்றுக்களிலிருந்து கைவிடப்பட்டிருந்தன.

(இ) மீளாய்வாண்டிற்குரியதாகப் பெறப்பட்ட ரூபா 411,520 தொகையான நிலையான வைப்பு வட்டி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 பெறவேண்டிய கணக்குகள்

02 வருடங்கள் முதல் 03 வருடங்கள் வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 63,280 கூட்டுத்தொகையான கிடைக்க வேண்டிய கடை வாடகையை அறவிடுவதற்கோ அல்லது புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் கணக்கு விடயங்களுக்கு எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் இன்மையினால் அந்த விடயங்களை கணக்காய்வின்போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்தவோ அல்லது பரீட்சிப்பதற்கோ முடியாதிருந்தது.

| கணக்கு விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா | |
| நிலையான சொத்துக்கள் | 7,487,441 | நிலையான சொத்துப் பதிவேடு |
| செலுத்தவேண்டிய கணக்குகள் | 76,100 | மீதி உறுதிப்படுத்தல் கடிதம், காலப்பகுப்பாய்வு அறிக்கை, விரிவான பட்டோலை. |

### 1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் ஏற்பாடுகளுடன் இணங்காமைகள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) 1989 ஏப்ரல் 17 ஆந் திகதிய 554/5 ஆம் அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிக் கோப்பின் 59 ஆவது விதி | சபை அதிகாரப் பிரதேசத்திற்குரிய வியாபார நிறுவனங்கள் தொடர்பாக மெய்மையாய்வு கணக்காய்வுத் திகதியான 2015 சனவரி 01 ஆந் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) உள்ளூராட்சி, மாகாணசபைகள் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சுச் செயலாளரின் 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றறிக்கை | 06 மாதங்களுக்கு ஒரு தடவை வாகனங்களின் எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்படவேண்டிய போதிலும் சபைக்குச் சொந்தமான 04 வாகனங்கள் தொடர்பில் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 224,055 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சி வருமானம் ரூபா 132,940 ஆக இருந்தது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ஏனைய வருமானம் பெறுவனவுகள் ரூபா 194,112 இனால் அதிகரித்தமை மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 91,115 இனால் அதிகரிப்பதற்கு பிரதான காரணமாக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளவாறான வருமானம் | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| ஆதனவரி | - | 48 | - |
| வாடகை | 827 | 527 | 300 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 50 | 57 | - |
| ஏனைய வருமானம் | 1,201 | 1,232 | - |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

**பொருள் மெய்மையாய்வுச் சபை அறிக்கையின் சிபாரிசுகளை அமுல்படுத்தாமை**

2014 சனவரி 28 ஆந் திகதி நடைபெற்ற பொருள் மெய்மையாய்வுச் சபை அறிக்கையின்படி 03 வகையான பொருட்களை பழுதுபார்ப்பதற்கும், 11 வகையான பொருட்களை அகற்றுவதற்கும், 37 வகையான பொருட்களைள அழிப்பதற்கும் சிபாரிசு செய்யப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2015 சனவரி 01 ஆந் திகதி வரையிலும் அதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

-------------------------

கோமரன்கடவல பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் இடம் பெற்ற ஊற்று குடிநீர் பற்றாக்குறைக்கு தீர்வாக புறநெகும செயற்திட்டத்தின் கீழ் குடிநீர் செயற்திட்டமொன்றை மூன்று கட்டங்களின் கீழ் அமுல்படுத்துவதற்காக சபையினால் ரூபா 50,170,730 பெறுமதியான மூன்று உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருந்தன.

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) செயற்திட்டத்தின் முதலாவது கட்டத்தின் கீழ் 300 குடும்பங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட நீர்க்குழாய் பதிக்கும் நிர்மாண நடவடிக்கைகள் உடன்படிக்கையின்படி 2013 திசெம்பர் 07 ஆந் திகதியளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2015 சனவரி 01 ஆந் திகதி வரையிலும் அந் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சுகாதாரமான பாதுகாப்பான குடிநீர் இல்லாமையின் காரணமாக இது வரையிலும் கோமவரன்கடவல பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் மாத்திரம் 108 சிறுநீரக நோயாளர்கள் அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் தற்போது ரூபா 34 மில்லியன் செலவிடப்பட்டிருந்த இந்த குடிநீர் செயற்திட்டத்திலிருந்து எந்தவொரு வீட்டிற்கும் இது வரை குடிநீர் வழங்குவதற்கு முடியாதிருந்தது.

(இ) 2005 இன் 03 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் III ஆம் பகுதியின் பிரகாரம் (2007 இன் 13 ஆம் இலக்கம் மற்றும் 2009 இன் 18 ஆம் இலக்க நிதி திருத்தங்களின் கீழ்) ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்ட ரூபா 25,484,622 தொகைக்குரிய நிர்மாணச் சான்றிதழ் நிதிய வரியான (CIGFL) ரூபா 63,712 தொகை நிறுத்தி வைக்கப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

-----------------------------------------

மீளாய்வாண்டின் பாதீட்டு நிதியேற்பாட்டிற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே 02 சதவீதம் முதல் 70 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் காணப்பட்டது. அதன் படி வருடாந்த பாதீடு முறையான நிதிக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4. மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 01 | - | 01 |
| இரண்டாம் நிலை | 15 | 06 | 09 |
| மூன்றாம் நிலை | 15 | 06 | 09 |
| மொத்தம் | 31 | 12 | 19 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 யூன் மாதம் முதல் வெற்றிடமாகக் காணப்படுகின்ற பிரதேச சபையின் செயலாளர் பதவிக்காக தகுதியான ஒருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அபிவிருத்தி உத்தியோகத்தர், சாரதி, இயந்திர இயக்குனர் மற்றும் வேலைப் பரீட்சகர் போன்ற பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிர்வாகம்

(இ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு

(ஈ) ஒப்பந்த நிர்வாகம்

(உ) மனித வள முகாமைத்துவம்

(ஊ) பாதீட்டுக் கட்டுப்பாடு